# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 871/2016

ஆணை எண். 197/2016

நாள் : 03 /12/2016

22/08/2016 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி. – முறையீடாக பதிவு செய்யப்பட்ட நாளிதழ் செய்தி

மண்டல அலுவலர்,
மண்டலம் – 2
மணலி மண்டலம்,
சென்னை மாநகராட்சி. – **எதிர் மனுதாரர்**

சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வடபெரும்பாக்கத்தில் உள்ள சமுதாயக்கூடம் குறித்து, 22.08.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில், "மணலி மண்டல அதிகாரிகள் அலட்சியம், ஏழைமக்கள் பயன்படுத்தமுடியாமல் இழுத்துமூடப்பட்ட சமுதாயக்கூடம் " என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 7(1)ன் கீழ், மேற்படி நாளிதழ் செய்தி குறித்து நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, 871/2016 எண்ணிட்ட முறையீட்டுமனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இச்செய்தி குறித்து மணலி மண்டல அலுவலர் தாக்கல் செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வடபெரும்பாக்கத்தில் உள்ள சமுதாயக்கூடம் குறித்து, 22.08.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில், "மணலி மண்டல அதிகாரிகள் அலட்சியம், ஏழைமக்கள் பயன்படுத்தமுடியாமல் இழுத்துமூடப்பட்ட சமுதாயக்கூடம் " என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்படி செய்தியில், முன்னாள் வார்டு கவுன்சிலர் திருமதி கவிதா நாராயணன் இச்சமுதாயக்கூடத்தைத் திறக்கக்கோரி மாமன்றக்கூட்டத்தில் கோரிக்கை வைத்தும், திறக்கப்படாமலேயே உள்ளது என்றும் அதனால் பாத்திரங்கள் மற்றும் மேஜை நாற்காலிகள் வீணாகிக்கொண்டிருக்கின்றன என்று அப்பகுதி மக்கள் குறைபட்டுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

/2/

2. நாளிதழின் செய்தி குறித்து, மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட மேற்படி சமுதாயக்கூடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடும்வகையில், ஒருநாள் மற்றும் அரைநாள் வாடகைத் தொகையை நிர்ணயிப்பது சம்பந்தமான கோப்பு நடவடிக்கையில் உள்ளதென்றும், மாநகராட்சி ஆணையரின் அனுமதி பெற்றபின் சமுதாயக்கூடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். சமுதாயக்கூடத்திற்கு வாடகையை நிர்ணயம்செய்வதற்கு மேலும் காலம் தாழ்த்தாமல் இச்சமுதாயக்கூடத்தினை விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை விரைவுபடுத்துமாறும் மேலும் காலம் தாழ்த்தினால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதோடு எந்தநோக்கத்திற்காக சமுதாயக்கூடம் கட்டப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாது என்பதையும் கருத்திற்கொண்டு மண்டல அலுவலர் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 2**
**மணலி மண்டலம்,**
**சென்னை மாநகராட்சி.**
**எண்.127, பாடசாலை தெரு,**
**மணலி, சென்னை – 68.**

நகல்

**ஆணையர்,**
**சென்னை பெருநகர மாநகராட்சி,**
**ரிப்பன் கட்டிடம்,**
**சென்னை – 600 003.**

/உண்மை நகல்/

பழனிவேல்

செயலாளருக்காக.